**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 430/2015**

**PW- 9 17.09.2021**

| | |
|---|---|
| **Name** | பாத்திமாபர்வீன் |
| **Husband's Name** | சம்மீன்கபீர் |
| **Village** | நாகர்கோவில் |
| **Taluk** | நாகர்கோவில் |
| **Calling** | மோட்டார் வாகன ஆய்வாளர் |
| **Age** | 41 |

முதல் விசாரணை

நான் தற்போது நாகர்கோவில் RTO அலுவலகத்தில் பணியாற்றி வருகிறேன். சம்பவ காலத்தில் கோவில்பட்டி RTO அலுவலகத்தில் பணியிலிருந்த கடந்த 04.06.15 ந்தேதி பிற்பகல் 2.00 மணியளவில் கடம்பூர் காவல் குற்ற எண் 70/15 என்ற வழக்கில் தொடர்புடைய TAM 6459 என்ற கனரக சரக்கு வாகனத்தை எனது அலுவலகத்தில வைத்து பரிசோதனை செய்து பார்த்தபோது வாகனத்தில் எந்த சேதமும் காணப்படவில்லை, வாகனத்தின் கைத்தடைதிறன் மற்றும் கால்தடைதிறன் 66% நல்ல இயங்கும் நிலையில் இருந்தது. மேற்கண்ட வாகன விபத்தானது எந்தவித இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்று ஆய்வறிக்கை வழங்கினேன். . நான் வழங்கிய ஆய்வறிக்கை அ.சா.ஆ 3 ஆகும் .இவ்வழக்கு பற்றி என்னை போலிசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை

சம்பவ தேதி 26.05.15 ந்தேதி. 9 நாட்கள் காலதாமதமாக ஆய்வு செய்தற்கு காரணம் எதுவும் இல்லை.நான் போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி

**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 430/2015**

**PW-10** **17.09.2021**

| | |
|---|---|
| **Name** | லூர்து சாமி |
| **Father's Name** | மிக்கேல்சாமி |
| **Village** | அச்சங்குளம் |
| **Taluk** | கயத்தார் |
| **Calling** | சொந்ததொழில் |
| **Age** | 55 |

முதல் விசாரணை

நான் அச்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.அ.சா.1 எனது மகன் . வழக்கில் இறந்த நபர் அந்தோணி என்ற ஸ்டீபன் எனக்கு தெரிந்தவர்.27.05.12 ந்தேதி மதியம் 1.15 மணிக்கு நான் திருநெல்வேலி ஐகிரவுண்டு மருத்துவமனைக்கு சென்றேன் அங்குபிரேத விசாரணையின்போது உடனிருந்தேன். வழக்கு பற்றி போலிசார்என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை

வழக்கில் இறந்தவர் எனக்கு சொந்தகாரர் என்றால் சரிதான்.நான் விபத்துநடக்கும்போது ஊரில் விவசாயம் பார்த்துகொண்டிருந்தேன்.நான் போலிசாரிடம் கையெழுத்து எதுவும் செய்யவில்லை.போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் சம்பவம் கேள்விபட்டு திருநெல்வேலி மருத்துவமனைக்கு செல்லவிலலை என்றால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி

**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 430/2015**

**PW-11** **17.09.2021**

| | |
|---|---|
| **Name** | வேல்சாமி |
| **Father's Name** | சண்முகசுந்தரம் |
| **Village** | அச்சங்குளம் |
| **Taluk** | கயத்தார் |
| **Calling** | கூலி |
| **Age** | 67 |

<u>முதல் விசாரணை</u>

நான் அச்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விபத்து சம்பந்தமாக கேள்விபட்டு திருநெல்வேலி ஐகிரவுண்டு மருத்துவமனைக்கு சென்றேன் வழக்கு பற்றி வேறு ஒன்றும் தெரியாது.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தார் என்றும் போலிசார் விசாரணையில் கடந்த 20.06.15 ந்தேதி எங்கள் ஊரைசேரந்த லூர்து சாமி என்பவர் அவர்களது மகன்களுக்கு மொட்டைபோடவேண்டி ஊர்காரர்களை அழைத்துகொண்TAM 6459 Ashokleyland லாரியில் புளியம்பட்டிசெல்வதற்கு சொக்கலிங்கபுரம் விலக்கில் சுமார் 9.30 மணிக்கு லாரி டிரைவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஒட்டி மேடுபள்ளத்தல் தூக்கி அடித்ததில் பின்பக்க கதவை சங்கிலியால் கோர்த்து அதில் அமர்ந்திருந்த அருண்கிருத்துராஜ் என்ற அருண்மற்றும் சார்லஸ் மற்றும் சிலருக்குகாயங்கள் ஏற்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இருந்தார்கள் என்று கேள்விபட்டு அங்கு சென்றேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி

**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 430/2015**

**PW-12** **17.09.2021**

| | |
|---|---|
| **Name** | அந்தோணிமைக்கேல்ஸ்டீபன் |
| **Father's Name** | லூர்துசாமி |
| **Village** | அச்சங்குளம் |
| **Taluk** | கயத்தார் |
| **Calling** | ஆசிரியர் |
| **Age** | 28 |

<u>முதல் விசாரணை</u>

நான் அச்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.கடந்த 26.05.12 ந்தேதி காலை9.30 மணிக்கு போலிசாார் சொக்கலிங்கபுரம் பாலத்துக்கு அருகில் வரைபடம் வரைந்து எழுதினார்கள்.அதில் நானும் மற்றும் ஒரு நபரும் கையெழுத்து செய்தோம்.என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் . பார்வைமகஜர் ஏற்கெனவே அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தில் காயப்பட்டவர்கள் இறந்தவர்கள் எனக்கு உறவினர்கள். நான் சம்பவ நடக்கும்போது அச்சங்குளத்திலிருந்து புளியம்பட்டிககு சென்று கொண்டிருந்தேன் .நான் மருததுவமனை செல்லவில்லை.நான் பள்ளிக்கு 10 மணிக்குசென்றேன். நான் காவல் நிலையம் சென்றேன் அங்குபெயர் முகவரி எழுதினார்கள் அங்கு வைத்து தான் கையெழுத்து போட்டேன். நான் சொன்னதுபோல் சம்பவஇடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி